சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.40/2022

03.12.2025

வா.சா.1 திரு.ராமகிருஷ்ணன், த/பெ. கணேசன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்து எனக்கு வேண்டும் என வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புல எண்.114/12 ஆனது பாகப்பிரிவினை பத்திரத்தில் எந்த அட்டவணை சொத்தில் காணப்பட்டுள்ளது என்றால் டி அட்டவணை சொத்தில் உள்ளது. புல எண்.114/12 ன் சொத்தின் முழுவிவரத்தை தெரியுமா என்றால் தெரியும். புல எண்.114/12 என்பது நத்தம் புறம்போக்காகும். புல எண். 114/12 அரசு புறம்போக்கு என்றால் சரியல்ல. புல எண். 114/12 நிலமானது அரசு புறம்போக்கு என்பதால் அதை பொறுத்து பரிகாரம் எதுவும் கோர இயலாது என்றால் சரியல்ல. 30.03.1976 ல் பாகப்பிரிவினை பத்திரத்தில் அ அட்டவணை சொத்து கணேசன்பிள்ளை மறைவிற்கு பிறகு அவரின் மனைவி மங்களாம்பாளும் அவருக்கு பின்னிட்டு 2, 3 வாதிகள் அடைந்துக்கொள்ளவேண்டும் என சொல்லப்பட்டிருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அப்படி அந்த பத்திரத்தில் எதுவும் காணப்படவில்லை என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் வீட்டின் கொல்லையில் மேல்பாதி, கீழ்பாதி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் அதில் கொல்லையை மட்டும் தான் அடைந்துக்கொள்ளவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் வீட்டை யார் அடைந்துக்கொள்ள வேண்டும் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எங்கள் குடும்பத்திற்குள் 30.03.1976 ல் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். அப்போது நான் மைனராக இருந்தேன் என்றால் சரிதான். பாகப்பிரிவினையில் எ செட்டியூல் சொத்து எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். புல எண் 114/12 எ செட்டியூலில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.114/12 ல் தான் வீடு உள்ளது என்றால் சரிதான். எ செட்டியூல் சொத்தை எனது தாயார் எனது தகப்பனாருக்கு பின்னிட்டு எவ்வித பாராதீனமும் செய்யாமல் அடையவேண்டியது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வீடு உள்ள இடம் அரசு புறம்போக்கு என்பதால் தான் எனது தகப்பனார் வீட்டை பொறுத்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வீடு உள்ள நிலம் அனைவருக்கும் சொந்தமானது என்பதால் அதனை பொறுத்து நான் கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் எனக்கு மட்டும் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் 2, 3 வாதிகளுக்காக சாட்சியமளிக்கவில்லை என்றால் சரிதான். 2,3 வாதிகளுக்கும் சேர்த்து

நான் பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. 1976 ல் எனக்கு வயது 14 இருக்கும். 1980 ல் நான் மேஜராகிவிட்டேன் என்றால் சரிதான். நான் மேஜராகி 45 வருடங்கள் கழித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 10 ஊரில் பஞ்சாயத்து பேசியுள்ளோம். எந்த எந்த தேதியில் யார் யார் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்பதை பிராதிலும் முதல்விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் அதற்கான ஆவணங்கள் என்னிடம் உள்ளது. அந்த ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்துவிட்டதால் அந்த ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. வழக்கிற்காக பின்னிட்டு பஞ்சாயத்து ஏற்பட்டதாகவும் ஆவணம் உள்ளதாகவும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாமோதரன் எனக்கு இரண்டாவது சகோதரன் ஆவார். எனது சகோதரன் தாமோதரன் தான் எனது பெற்றோரை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் பராமரித்தோம். நான் வணிகவரி துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். பாஸ்கரன் சத்துணவு துறையிலும், மனோகரன் கோ ஆப்ரடிவ் வங்கியிலும் தாமோதரன் கிராம பணியாளராகவும் பணியாற்றினார்கள். நான், பாஸ்கரன், மனோகரன் ஆகியோர்கள் பணியின் காரணமாக வெளியூரில் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. பாஸ்கரன் உள்ளூரில் வசித்து வந்தார். புல எண் 114/12 ல் தற்போது ஆர்சிசி கட்டிடம் உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டின் மதிப்பு தற்போது ரூ.25,00,000/- இருக்கும் என்றால் வாய்ப்பில்லை, 40 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. என்னை பொறுத்தவரை அந்த வீடு ரூ.15,00,000/- போகும் அந்த வீட்டில் தாமோதரனும் அவரது வாரிசுகளும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் தாவா சொத்தில் வீடு உள்ளதை மறைத்தும் வீட்டிற்கு மதிப்புக்குண்டான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தாமலும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாமோதரன் என்னிடம் அனுமதி கேட்டு குடியிருந்து வருவதாக வழக்குரை மற்றும் முதல்விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை. என் தாயார் இறந்த பின்னிட்டு அவர் தொடர்ந்து வசித்து வருகிறார். தாமோதரன் என் பெற்றோருடன் சேர்ந்து 45 வருடங்களாக தாவா சொத்து இருந்த வீட்டில் வசித்து வருகிறார் என்றால் என் மூத்த சகோதரர் ஜெயபாலும் சேர்ந்துதான் வசித்து வருகிறார். ஜெயபால் 6 மாதம் மட்டும் வசித்தார், அவரை தாமோதரன் விரட்டிவிட்டார். தாவா சொத்தை எனது சகோதரர் ஆக்கிரமிப்பு செயய்வில்லைஎன்றாலும் அனுபவத்தின் அடிப்படையில் தாமோதரன் பெயருக்கு அரசால் பட்டா வழங்கப்பட்டு தாமோதரன் இறந்த பின்னிட்டு அவரின் வாரிசுகள் அந்த வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எனகரு தெரிந்தே எனது

சகோதரர் 45 வருடங்கள் வசித்து வந்துவிட்டதால் தாவா சொத்தை பொறுத்து நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் அற்றுப்போய்விட்டது என்றாலும் சரியல்ல. சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் இறந்த பின்னிட்டுதான் எங்களுக்குள் பிரச்னை ஏற்பட்டது.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.